මධ්‍යම පරිසර අධිකාරිය
மத்திய சுற்றாடல் அதிகாரசபை
Central Environmental Authority

"පරිසර පියස" , 104, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
"பரிசர பியச", 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை, இலங்கை.
"Parisara Piyasa", 104, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla, Sri Lanka. Web : www.cea.lk

අපේ යොමුව / எமது தொடர்பு / Our Ref. } CEA/06/EPU/PR/39/2022 ඔබේ යොමුව / உமது தொடர்பு / Your Ref. } දිනය / திகதி / Date } 2023.12.20

## ஊடக அறிவித்தல்

**சிவனொளிபாத யாத்திரையின்போது பொலித்தீன் பிளாஸ்ரிக் கொண்டுவரவேண்டாம்.**

**- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வேண்டுகோள்....**

சிவனொளிபாத யாத்திரையின்போது பொலித்தீன் பிளாஸ்ரிக் உள்ளிட்ட குப்பைகூளங்களை அந்த பிரதேசத்தில் கையுதிர்ப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபை சிவனொளிபாத யாத்திரையில் பங்கேற்கின்ற அடியார்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றது.

இத்தடவை சிவனொளிபாத யாத்திரைப் பருவம் 2023 திசெம்பர் மாதம் 26 ஆந் திகதிய மார்கழி பௌர்ணமி தினத்தில் தொடங்குவதோடு 2024 வைகாசி பௌர்ணமி தினத்துடன் நிறைவடைகின்றது. பொதுவாக அடியார்கள் பெருந்தொகையினராக சிவனொளிபாதமலையை தரிசிப்பதற்காக வருகைதருவர். சிவனொளிபாதம் சமனல இயற்கை பாதுகாப்பு பிரதேசத்திலேயே அமைந்துள்ளது. யுனெஸ்கொ அமைப்பு 2010 ஆம் ஆண்டில் உலக மரபுரிமையாக பிரகடனஞ் செய்துள்ள இந்த இயற்கை பாதுகாப்பு பிரதேசம் கூருணர்வுமிகுந்த சுற்றாடல் வலயமாக இனங்காணப்பட்டுள்ளது. இலங்கைக்கே ஓரிடஞ்சார்ந்ததான தாவரங்கள் வளர்ந்துள்ள இந்த இயற்கை பாதுகாப்பு பிரதேசத்தில் இலங்கைக்கே ஓரிடஞ்சார்ந்தான விலங்குகளும் வசிக்கின்றன. இலங்கையின் பிரதான ஆறுகள் ஊற்றெடுக்கின்ற நீர் மூலங்கள் சமனல இயற்கை பாதுகாப்பு பிரதேசத்தில் அமைந்துள்ளன. கூருணர்வுமிகுந்த இந்த சுற்றாடல் வலயத்தைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையும் பொறுப்புமாகும். பொலித்தீன், பிளாஸ்ரிக் அல்லது குப்பைகூளங்களை இந்த பிரதேசத்தில் கையுதிர்ப்பதால் கூருணர்வுமிகுந்த சுற்றாடல் வலயத்தில் நிலவுகின்ற தனித்துவமான உயிர்ப்பன்வகைமைக்கு பங்கமேற்படுகின்றது. அதைப்போலவே, நீர் மூலங்கள் மாசடைகின்றன. மேலும் இந்த கழிவுப்பொருட்கள் நீர் மூலங்கள் ஊடாக கழுவிச்செல்லப்பட்டு நாடுபூராவிலும் உள்ள ஆறுகள், கால்வாய்கள், ஓடைகளை மாசடையச் செய்விப்பதோடு இறுதியாக கடலிலும் சேர்கின்றன.

| Chairman<br>Tel : 2872361,2124605<br>Fax : 2872347 | Director General<br>Tel : 2872359, 2124613<br>Fax : 2872608 | General Office<br>Tel : 2872278, 2873447, 2888999, 2124600 | Complaints Hotline : 1981 | |
|---|---|---|---|---|
| Deputy Director Generals — HRD, Admin. & Finance<br>Tel: 2124610 | Envt. Pollution Control<br>Tel : 2124618<br>Fax : 2872605 | Envt. Mgt. & Assessment<br>Tel : 2124626<br>Fax : 2872296 | Envt. Edu. & Awareness<br>Tel : 2124614<br>Fax : 2872609 | Waste Management<br>Tel : 2124634<br>Fax : 2882152 / Regional Operation<br>Tel : 2124638<br>Fax : 2872275 |



පරිසර අමාත්‍යාංශය | சுற்றாடல் அமைச்சு | Ministry of Environment

அதனால் சிவனொளிபாத யாத்திரைக்காக வருகின்றபோது பொலித்தீன், பிளாஸ்ரிக்கை கொண்டுவரவேண்டாமெனவும் ஏதேனும்விதத்தில் பொலித்தீன் பிளாஸ்ரிக் பொதியிடல்களை பாவிக்கவேண்டி நேரிட்டால் பாவனையின் பின்னர் உற்பத்திசெய்யப்படுகின்ற குப்பைகூளங்களை இந்த கூருணர்வுமிக்க சுற்றாடல் வலயத்தில் முறைசாராதவகையில் விடுவிக்க வேண்டாமெனவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் திரு. பி.பீ. ஹேமந்த ஜயசிங்க அடியார்களைக் கேட்டுக்கொள்கிறார். அதைப்போலவே சிவனொளிபாதத்தை தரிசிக்க வரும்போது ஏதேனும்விதத்தில் குப்பைகள் உற்பத்தி செய்யப்படுமாயின் அவற்றைத் தமது வீடுகளுக்கே எடுத்துச் செல்லவோ அல்லது சிவனொளிபாதத்திற்கு பிரவேசிக்கின்ற பிரதான பாதைகளின் தொடக்கப் புள்ளிகளில் (அதாவது நல்லதண்ணி வீதி மற்றும் இரத்தினபுரி திசையில் உள்ள இரண்டு பாதைகள்) உள்ளூராட்சி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தொண்டர் அமைப்புகள் மூலமாக சிவனொளிபாத யாத்திரைப் பருவத்திற்காக பேணிவரப்படுகின்ற குப்பைகூள சேகரித்தல் நிலையங்களில் கையளிக்கவோ நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து அடியார்களிடமும் அவர் தயவுடன் கேட்டுக்கொள்கிறார்.

ஊடக இணைப்பாக்கம் - ஊடக உத்தியோகத்தர் - ஸ்ரீயாஞ்சனி லொக்குலியன - 0776252288

பி. பீ. ஹேமந்த ஜயசிங்க
பணிப்பாளர் நாயகம்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை